## 1 கொஞ்சம் சும்மா இருத்தல்

தனியாக இருக்கவேண்டும்

கைபேசி இல்லாமல்

கடிகாரம் இல்லாமல்

யாருமே பார்க்காமல்

யாருமே விசாரிக்காமல்

யாருமே இல்லாமல்

எதுவுமே செய்யாமல்

சும்மா

மூச்சு விட்டபடி

தனியாக இருக்க வேண்டும்

இல்லை

ஒரு கிளியைப் போல

ஒரு நாயைப் போல

ஒரு தவளையைப் போல

கொஞ்சமாவது

சும்மா

இருக்கவேண்டும்

## 2 ஜூரோங் மேற்கில் மழைக்காலம்

இப்போது மழை

மழையும், நீயும்

இருப்பது தான் மழைக்காலம் .

தண்டனைகள் வழங்கப்பட்ட

நிரபராதி

மீண்டும் மீண்டும் தண்டிக்கப்படும்

அவலத்தின் காலம்

இந்த மழைக்காலம்

எல்லா மன்னிப்புக் கடிதங்களும்

கிடக்கும் உன்

குப்பைத்தொட்டியில்

பெருகியபடி இருக்கிறது

எனதன்பு.

நீயல்லாத இந்த

மழைக்காலத்தைக்

கடக்கமுடியாமல்

உன்னை மன்றாடுகிறேன்

விழி இழந்தவன்

நெடுஞ்சாலையைக் கடக்கும்

பாவம் மிகுந்த காலம்

இந்த மழைக்காலம்

3 பாட்ஷாவின் பாடுகள்

நீங்கள் நினைப்பது போல்

பாட்ஷாவாக மாறியது

என் கனவல்ல

என் நெடுங்கால லட்சியமும் அல்ல

பாட்ஷாவானது

ஒரு தற்செயல்

ஓர் உணர்ச்சிவசம்

ஒரு முட்டாள்தனம்

ஒரு பழக்கத்திற்காக செய்த தற்கொலை

நீங்கள் நினைப்பது போல்

பாட்ஷாவாக இருப்பது

சுதந்திரம் அல்ல

எப்போதும் கண்ணாடி அணிந்துகொண்டும்

எப்போதும் படிகளில்  வேகமாக நடந்து கொண்டும்

எப்போதும் ஆட்கள் புடைசூழ வாழ்வது

ஒரு துயரம்

ஒரு நமைச்சல்

ஓர் ஆற்றாமை

என் வண்டியை நானே ஒட்டி

யாரும் கூட இல்லாமல்

நான்கு வெள்ளி மீகோரென்கை

நானே  தின்று

ஒரு மாணிக்கமாக வாழ்வது

ஒரு கொடுப்பினை

## 4 அரசியின் கால்கள்

எல்லா செருப்புகளும் பெட்டியில்

அது மட்டும் தரையில்

அதே இடத்தில் ஆறு ஆண்டுகளாய்

ஓர் அபூர்வ மலரைப் போல்

தனியாய் காத்துக்கிடக்கிறது

பக்கத்து வீட்டில்

உயர்ரக கருப்பு வார் கொண்ட

பெண்கள் அணியும் செருப்பு

நான் பார்த்து

யாருமே அணிந்ததில்லை

ஒன்று

அதை அணிந்த கால்கள்

உள்ளிருந்து திரும்பவே இல்லை

இல்லை

அந்தக் கால்கள் செருப்பு அணிவதே இல்லை

இல்லை

அந்தக் கால்களே இப்போது இல்லை

5 ஒரு பின்நவனீத்துவ கவிஞனும் - கட்டத்துரைகளும்

அவர்கள்

தொலை பேசுகிறார்கள்

மின்னஞ்சல் அனுப்புகிறார்கள்

கடிதம் எழுதுகிறார்கள்

என் கவிதை வெளிவந்த

நாளிதழ் ஆசிரியர் பதட்டம்

அடைகிறார்

கவிதை

மஞ்சள் பத்திரிக்கைத் தரம்

ஆபாசம் ஒழுக்கக்கேடு

என்று குறுந்செய்தி அனுப்புகிறார்கள்

என் அடையாள அட்டை எண் கேட்டு

ஆசிரியரை நிர்பந்திக்கிறார்கள்

மனநோயாளி என்கிறார்கள்

பிழைத்துப் போகட்டும் பேடி என்கிறார்கள்

முகப்புத்தகத்தில் அவர்களுக்குள் சபதம்

எடுக்கிறார்கள்

என் வீட்டை முற்றுகையிடுவதாக

என் கவிதையை எரிப்பதாக

எனக்கான இடத்தை அவர்கள் முடிவுசெய்வதாக

உண்மையில் அவர்களுக்கு

என்னைத் தெரியாது

அவர்கள் சந்தேகமெல்லாம்

அவர்களின் சகாவான

யேசுபிரானிடம்

பாவம் பரமபிதா

மறுநாள் அழைத்தார்

என்னைப் பழைய

வால்டர் வெற்றிவேலாக

ஏ சி பன்னீர்செல்வமாக

வரவேண்டுமென கேட்டார்

மன்னித்துக்கொள்ளுங்கள்

பரமபிதா

நான் தானாக வந்து

வண்டியிலேறிய கைப்புள்ளை

6 பின்காலனித்துவ நாட்டில் -ஒரு பாணன்

அரசு

அதிகாரம்

நிறுவனம்

நிறுவன மதங்கள்

போலிச் சாமியார்கள்

ஆழ்நிலைத் தியானங்கள்

சில ஆயிரம் வெள்ளிகள்

டெங்கு

பிளாஸ்டிக் அரிசி

விதை நீக்கிய திராட்சை

விதையும் குரலும் நீக்கிய நாய்க்குட்டி

எங்கும் பொருத்தப்பட்டிருக்கும்

கண்கள்

கடைவதீகளில்

நூல்நிலையங்களில்

ரயில்  நிலையங்களில்

விமான  நிலையங்களில்

முட்டுச் சந்துகளில்

குழந்தைகள் பூங்காக்களில்

மின்தூக்கிகளில்

கழிவறை வராண்டாக்களில்

கைபேசிகளில்

உயர்ரகப் பாதுகாப்பு

யாரும் கேட்கவிரும்பாத பாடல்களை

தனியே பாடி வடக்கிருந்து உயிர்நீத்தான்

பாணன்